## இந்திய அளவில் தொழில் புரிவதற்கு சிறந்த சூழலமைப்பு கொண்ட

# தமிழ்நாட்டில் முதலீடு செய்ய வாரீர்!

## “உலக முதலீட்டாளர்கள் மாநாடு - 2024” க்கான இலச்சினையை வெளியிட்டு - முதல்வர் மு.க.ஸ்டாலின் வேண்டுகோள்!



**சென்னை, ஆக. 12-**

**“இந்திய அளவில் தொழில் புரிவதற்கு சிறந்த சுழலமைப்பு கொண்ட தமிழ்நாட்டில் முதலீடு செய்ய வாரீர்! என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உலக முதலீட்டாளர்கள் மாநாடு 2024 - க்கான இலச்சினை வெளியிட்டு உரையாற்றும் போது வேண்டுகோள் விடுத்தார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (10.8.2023) சென்னையில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை சார்பில் நடைபெற்ற “உலக முதலீட்டாளர்கள் மாநாடு 2024” முன்னோட்ட அறிமுக விழாவில், இம்மாநாட்டிற்கான இலச்சினையை (Logo) வெளியிட்டு ஆற்றிய உரை வருமாறு:-

அடுத்த ஆண்டு ஜனவரி மாதம், நாம் நடத்த இருக்கின்ற மாபெரும் உலக முதலீட்டாளர் மாநாட்டின் பிரம்மாண்டத்தை முன்கூட்டியே வெளிப்படுத்தக் கூடிய நிகழ்ச்சியாக இந்த நிகழ்ச்சி அமைந்திருக்கிறது. உலக முதலீட்டாளர்கள் மாநாடு வரும் 2024 ஜனவரி மாதம் 7, 8 ஆகிய தேதிகளில் சென்னையில் நடத்தப்படவுள்ளது என்பதை அறிவிப்பதில் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்த சிறப்பான முன்னெடுப்பைச் செய்துள்ள தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைப்புக்கு என்னுடைய மனமார்ந்த பாராட்டுதல்களை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

உலகளாவிய முதலீட்டாளர்கள் மாநாட்டுப் பெரு நிகழ்வுக்கான இலச்சினையை உலகுக்கு அறிமுகப்படுத்தவும், முன்னோட்ட அறிமுக விழாவை நடத்தவும், நாம் இங்கே கூடியுள்ளோம்.

**கலைஞர் ஆட்சியில் மாபெரும் தொழிற்புரட்சி!**

1996-2001-ஆம் ஆண்டு தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்த போது தான், தமிழ்நாட்டினுடைய தொழில் துறை மாபெரும் புரட்சியை அடைந்தது. பல்வேறு பன்னாட்டு நிறுவனங்கள் தமிழ்நாட்டைத் தேடியும், நாடியும் வந்தது.

இன்றைய தினம் சென்னையைச் சுற்றி காஞ்சிபுரத்துக்கோ - சோழிங்கநல்லூருக்கோ திருபெரும்புதூருக்கோ - ஒரகடத்துக்கோ நீங்கள் சென்றால், பார்க்கக்கூடிய பல தொழிற்சாலைகள், கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது உருவாக்கப்பட்டவைதான். அப்போது, தொழில் நிறுவனங்களை ஈர்ப்பதில் தமிழ்நாடு இரண்டாவது இடத்தை அடைந்தது. இது தொடர்பாக, ஆங்கில வர்த்தக நாளிதழ்கள் முதலமைச்சர் கலைஞரைப் பாராட்டி எழுதினார்கள்.

அப்போது இன்னொரு கருத்தையும் சொன்னார்கள். “தமிழ்நாடுதான் முதலிடத்திற்கு வந்திருக்க வேண்டும். நிறுவனங்களை அதிகம் ஈர்த்த தமிழ்நாடு, அதனை விளம்பரப்படுத்திக் கொள்ளவில்லை. அதனால்தான், இரண்டாம் இடம் வழங்கப்பட்டது” என்று எழுதினார்கள். அதாவது தொழில்களை ஈர்ப்பது மட்டும் முக்கியம் கிடையாது! அப்படிப் பல்வேறு தொழில்களை ஈர்த்திருக்கோம் என்று விளம்பரப்படுத்திக் கொள்ளவும் வேண்டும். அந்த வகையில், இந்த நிகழ்ச்சி மிகுந்த தேவையான ஒன்று.

முதலீடுகள் சாதாரணமாக வந்து விடாது. ஒரு ஆட்சி மீது நல்லெண்ணம் இருக்கவேண்டும். ஆட்சியாளர்கள் மீது மரியாதை இருக்கவேண்டும். அந்த மாநிலத்தின் உள்கட்டமைப்பு வசதிகள் சிறப்பாக இருக்கவேண்டும். சட்டம், ஒழுங்கு முறையாக இருக்க வேண்டும். இவ்வளவும் இருந்தால்தான் முதலீடுகள் செய்ய முன்வருவார்கள்.

2021ஆம் ஆண்டு ஆட்சி மாற்றம் நடந்த பிறகு, தொழில்துறையில் ஏராளமான முதலீடுகள் குவிகிறது என்றால், இந்த மாற்றங்களின் காரணமாகத்தான். தொழில் துறை அமைச்சராக பொறுப்பேற்றுள்ள தம்பி டி.ஆர்.பி. ராஜா அவர்கள் மிகத் திறமையாக இந்தத் துறையை வழிநடத்தி வருகிறார். அவர் நடத்த இருக்கிற உலக முதலீட்டாளர்கள் மாநாடு என்பது அவருக்கு நான் வைக்கக்கூடிய டெஸ்ட். எந்த டெஸ்ட் வைத்தாலும், அவர் “பர்ஸ்ட்” வருவார். அத்தகைய வேகம் கொண்டவர் அவர். செயல்தான் சிறந்த சொல் என நம்புகிறவன் நான்.

> **டி.ஆர்.பி.ராஜா திறமையாக துறையை நடத்தி வருகிறார்!**
>
> **2021ஆம் ஆண்டு ஆட்சி மாற்றம் நடந்த பிறகு, தொழில்துறையில் ஏராளமான முதலீடுகள் குவிகிறது என்றால், இந்த மாற்றங்களின் காரணமாகத்தான். தொழில் துறை அமைச்சராக பொறுப்பேற்றுள்ள தம்பி டி.ஆர்.பி. ராஜா அவர்கள் மிகத் திறமையாக இந்தத் துறையை வழிநடத்தி வருகிறார். அவர் நடத்த இருக்கிற உலக முதலீட்டாளர்கள் மாநாடு என்பது அவருக்கு நான் வைக்கக்கூடிய டெஸ்ட். எந்த டெஸ்ட் வைத்தாலும், அவர் “பர்ஸ்ட்” வருவார். அத்தகைய வேகம் கொண்டவர் அவர்.**

தொழில்துறையும் அப்படியே செயல்படவேண்டும் என்று எதிர்பார்க்கிறேன். நம்முடைய செயல்கள் நமக்காக பேசும்படி நீங்கள் உங்கள் சாதனைகளை தொடர வேண்டும்.

**1 டிரில்லியன் அமெரிக்க டாலர் என்ற இலட்சிய இலக்கு!**

இந்தியாவின் பொருளாதார வளர்ச்சியை வடிவமைப்பதில் தமிழ்நாடு முக்கியப் பங்காற்றிடும் விதமாக, 2030-ஆம் ஆண்டிற்குள், தமிழ்நாட்டின் பொருளாதாரத்தை 1 டிரில்லியன் அமெரிக்க டாலர் அளவுக்கு உயர்த்த வேண்டும் என்று ஒரு இலட்சிய இலக்கை நிர்ணயித்திருக்கிறேன். இந்த நோக்கத்திற்காக, தொழில்துறை பல்வேறு முதலீட்டு மாநாடுகளை நடத்தி வருகிறது.

கடந்த 2 ஆண்டுகளில், 241 முதலீட்டுக் கருத்துருக்கள் மூலம், 2 லட்சத்து 97 ஆயிரத்து 196 கோடி ரூபாய் முதலீட்டை ஈர்த்திருக்கிறோம். 4 இலட்சத்து 15 ஆயிரத்து 282 நபர்களுக்கு வேலைவாய்ப்புகள் உறுதி செய்யப்பட்டிருக்கிறது. மாநிலத்தில் சீரான மற்றும் பரவலான வளர்ச்சியை உறுதி செய்கின்ற விதமாக, தமிழ்நாட்டினுடைய பல்வேறு மாவட்டங்களில் இந்தத் திட்டங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

2024 ஜனவரியில் நடத்தவுள்ள உலக முதலீட்டாளர்கள் மாநாட்டை, “இதுவரை இவ்வாறு எங்குமே நடந்ததில்லை”என்று பார் புகழும் அளவுக்கு நடத்த வேண்டும்.

இந்த முதலீட்டாளர்கள் மாநாட்டின் மூலம், பல இலட்சம் கோடி ரூபாய் முதலீடுகள் ஈர்க்கப்படும். மாநிலத்தின் இளைஞர்களுக்கு, குறிப்பாக பெண்களுக்கு வேலைவாய்ப்பு பன்மடங்கு அதிகரிக்கும். நமது மாநிலத்தின் பொருளாதாரமும் பெருமளவு வளர்ச்சியடையும். அதற்கான இலச்சினையை வெளியிடுவதில் நான் உள்ளபடியே பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

“த” என்ற எழுத்து, தமிழ் எழுத்தின் அடையாளப் பிரதிபலிப்பாக இந்த இலச்சினையை நாங்கள் வடிவமைத்திருக்கிறோம்.

**தமிழ்நாட்டில் முதலீடு செய்ய ஊக்குவிக்க வேண்டும்!**

நமது தாய்த்தமிழ் மொழிதான், தமிழ்நாட்டைத் தாங்கிடும் தூண். எனவேதான், இந்த “த” இடம் பெற்றுள்ளது.

இலச்சினையே நமது இலக்கை காட்டுவதாக அமைந்திருக்கிறது. மேலும், இங்கே வந்திருக்கக்கூடிய தொழில்துறை கூட்டமைப்பினர் அனைவரும் தமிழ்நாட்டின் Brand Ambassador ஆக மாறி, முன்னணி நிறுவனங்களை தமிழ்நாட்டில் முதலீடு செய்ய ஊக்குவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வளர்ச்சி மிகுந்த தமிழ்நாட்டில் முதலீடு செய்ய வாருங்கள். உங்களைத் தமிழ்நாடு வருக! வருக! என வரவேற்கிறது. முதலீட்டின் மூலமாக தமிழ்நாடும் வளரும். உங்களது நிறுவனமும் வளரும். இந்திய அளவில், தொழில் புரிவதற்கான மிகச் சிறந்த சூழலமைப்பு கொண்ட மாநிலமாகத் தமிழ்நாடு திகழ்ந்து வருகிறது.

தொழில் நிறுவனங்களுக்கான நிலங்கள் கையிருப்பு அடிப்படையில், தமிழ்நாடு முதலிடத்தில் உள்ளது. பன்னாட்டு நிறுவனங்கள் எதிர்ப்பார்ப்புகளை பூர்த்தி செய்யும் விதமாக நம்பகமான உயர்தர குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் சூழலை தமிழ்நாடு கொண்டுள்ளது. உங்கள் தொழில் வளர்ச்சிக்கான சிறந்த இடம் தமிழ்நாடுதான். எனவே, அனைத்து நிறுவனங்களையும் வருக! வருக! என அழைக்கிறேன். ஜனவரி 7, 8 தேதிகளில் நடைபெறும் உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் உங்களையெல்லாம் சந்திப்போம்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

---

### சாலை விபத்தில் உயிரிழந்த

## நால்வர் குடும்பங்களுக்கு தலா ரூ. 2 லட்சம் நிதி!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, ஆக. 12 -

செங்கல்பட்டு மாவட்டத்தில் சாலை விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவி அறிவித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவிப்பு வெளியிட்டுள்ளார்.

செங்கல்பட்டு மாவட்டம், மறைமலைநகர் காவல்நிலைய எல்லைக்குட்பட்ட காட்டுப்பாக்கம் ரயில்வே சாலை சந்திப்பு எதிரில் நேற்று (11.8.2023) காலை சென்னை நோக்கி வந்த லாரி கட்டுப்பாட்டை இழந்து செங்கல்பட்டு நோக்கி சென்ற மூன்று இருசக்கர வாகனங்களின் மீது எதிர்பாராதவிதமாக மோதியதால் ஏற்பட்ட விபத்தில் நான்கு பேர் உயிரிழுந்தனர் என்ற துயரமான செய்தியினைக் கேட்டு மிகுந்தவேதனையடைந்தேன்.

செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியரை விபத்து நடந்த இடத்திற்குச் சென்று தேவையான மீட்பு நடவடிக்கைகளையும், மருத்துவ உதவிகளையும் விரைந்து மேற்கொள்ள கேட்டுக் கொண்டேன்.

மேலும், இவ்விபத்தில் காயமடைந்து செங்கல்பட்டு அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் பார்த்தசாரதி என்பவருக்கு சிறப்பு சிகிச்சை அளிக்க அறிவுறுத்தியுள்ளேன்.

இவ்விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும் அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா இரண்டு இலட்சம் ரூபாயும், மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் பார்த்தசாரதி அவர்களுக்கு ஐம்பதாயிரம் ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

### தமிழ்நாட்டின் ஆதி திராவிடர் - பழங்குடியினர்க்கான

## ஒன்றிய அரசின் நலத்திட்ட நிதி வெகுவாகக் குறைப்பு!

### தகவல் அறியும் உரிமைச் சட்டத்தில் அதிர்ச்சித் தகவல்!

*சென்னை, ஆக. 12-*

*தமிழ்நாடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மக்களின் நலனுக்காக ஒவ்வொரு ஆண்டும் ஒன்றிய அரசு நிதி ஒதுக்கி வருகிறது. கடந்த 2018-19 முதல் 2022-23 வரையிலான 5 ஆண்டுகளில் 3 ஆயிரத்து 19 கோடியே 65 லட்சம் வரை நிதி ஒதுக்கியுள்ளது. அதில் கடந்த 2018-19 நிதியாண்டில் மட்டும் ரூ.1,553 கோடி நிதி ஒதுக்கீடு செய்தது. இந்நிதியை ஒவ்வொரு ஆண்டும் படிப்படியாக குறைத்து, கடந்த 2022-23 நிதியாண்டில் வெறும் ரூ.159.78 கோடிகள் மட்டுமே ஒதுக்கீடு செய்துள்ளது.*

*இதுகுறித்து தகவல் அறியும் உரிமைச்சட்டம் மூலம், மதுரையைச் சேர்ந்த சமூக ஆர்வலர் எஸ்.கார்த்திக் தகவல்கள் பெற்றுள்ளார். தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் மூலம் தமிழ்நாடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறைக்கு ஒன்றிய அரசு கடந்த ஆண்டுகளில் ஒதுக்கிய நிதி விபரங்கள் பற்றி கோரப்பட்ட தகவலுக்கு தமிழ்நாடு ஆதிதிராவிடர் நல இயக்குநரகம் அளித்த தகவல்கள் அதிர்ச்சி அளிக்கின்றன.*

*2018-19 ஆம் ஆண்டு ரூ.1,553 கோடி ஒதுக்கிய ஒன்றிய அரசு, 2019-20 ஆம் ஆண்டு 385.51 கோடியும், 2020-21 ஆம் ஆண்டு ரூ.541.29 கோடியும், 2021-22 ஆம் ஆண்டு ரூ.379.59 கோடியும், 2022-23 ஆம் ஆண்டு 159.78 கோடியும் ஒதுக்கியுள்ளது. ஒன்றிய அரசு, தமிழ்நாடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மக்களுக்கான நலத்திட்ட நிதி ஒதுக்கீட்டை அடியோடு புறக்கணித்திருப்பது வெட்ட வெளிச்சமாகியுள்ளது.*

*இவ்வாறு நிதி ஒதுக்கீடுகளை தொடர்ந்து குறைத்து வருவதால் மாநிலத்தில் பல வருடங்களாக தமிழ்நாடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மக்களுக்காக பிரத்யேகமாக வழக்கத்தில் இருந்து வந்த கல்வி மற்றும் பொருளாதார மேம்பாட்டுப் பணிகள் பாதியிலேயே முடங்கியுள்ளது. தமிழ்நாட்டில் வாழும் பட்டியல் சாதி மற்றும் பட்டியல் பழங்குடியினர் மக்களுக்கு பெரும் ஏமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. இதனால் இம்மக்களின் கல்வி, வேலைவாய்ப்பு, பொருளாதார வளர்ச்சிகளில் பெரும் பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது.*

---

### முனைவர் வி.ஆர்.எஸ்.சம்பத் - முனைவர் சு.பாலசுப்பிரமணியன் பங்கேற்பு!

## முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு: முதல் உலகத் தமிழ் வளர்ச்சி மாநாடு!

## அமைச்சர்கள் க.பொன்முடி - மு.பெ.சாமிநாதன் - மா.சுப்பிரமணியன் - செஞ்சி மஸ்தான் பங்கேற்பு!

### வாகை சந்திரசேகர் - விஜயா தாயன்பனுக்கு விருதுகள்!

*சென்னை, ஆக.12-*

*பன்னாட்டுத் தமிழ்மொழி பண்பாட்டுக் கழகம் - சென்னை வளர்ச்சிக் கழகம் மற்றும் தமிழியல் மற்றும் பண்பாட்டுப்புலம் - தமிழ்நாடு திறந்தநிலை பல்கலைக் கழகம் இணைந்து நடத்தும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டை முன்னிட்டு முதல் உலகத்தமிழ் வளர்ச்சி மாநாடு இன்று (12.8.2023- சனிக்கிழமை) காலை 9 மணி முதல் 7 மணி வரை சென்னை, சைதாப்பேட்டை. தமிழ்நாடு திறந்த நிலைப் பல்கலைக்கழகம், பட்டமளிப்பு விழா அரங்கம் - கல்விப்புல வளாகத்தில் நடைபெறுகின்றது.*

*இவ்விழாவில் சென்னை வளர்ச்சிக் கழகம் வழங்கும் வளர் தமிழ் அறிஞர் விருது தமிழ் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் முனைவர் இ.சுந்தரமூர்த்திக்கு வழங்கப்படுகின்றது.*

*அதேபோன்று வளர் தமிழ் மாமணி விருது - நிறுவனங்கள் என்ற வகையில் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் - வாகை சந்திரசேகர், விஜயா தாயன்பன், தில்லி தமிழ்ச் சங்கம் - முகுந்தன், தமிழியக்கம், வேலூர் - முனைவர் அப்துல் காதர் - சுகுமாறன்,*

*ஹூஸ்டன் பல்கலைக் கழக தமிழ் இருக்கை - அமெரிக்கா, பெருமாள் அண்ணாமலை. எத்திராஜ் கல்லூரி தமிழ்த்துறை சென்னை, பேராசிரியர் டாக்டர் நிர்மலா.*

*புதுமை தமிழச்சி இயக்கம், அபுதாபி ஐக்கிய நாட்டு அமீரகம் - டாக்டர் திருமதி ஸ்ரீதேவி சிவானந்தம் ஆகியோர் பெறுகிறார்கள்.*

*அதேபோன்று வளர் தமிழ் மாமணி விருதுகள் முனைவர் ஒப்பிலா மதிவாணன், சாலமன் பார்த்தசாரதி பிள்ளை, திருமதி முனைவர் ஆர்.அனுராதா, முனைவர் எம்.எஸ். லட்சுமி, பாலசுப்பிரமணியன் கண்ணன், செல்வி சுதா சுவர்ணலட்சுமி ஆகியோர் பெறுகின்றனர்.*

*இந்நிகழ்ச்சி காலை 9 மணி முதல் இரவு 7 மணி வரை நடைபெறுகின்றது.*

*இந்நிகழ்ச்சியினை சென்னை பன்னாட்டுத் தமிழ்மொழி பண்பாட்டுக் கழகம் - சென்னை வளர்ச்சிக் கழகத் தலைவர் முனைவர் வி.ஆர்.எஸ்.சம்பத், சென்னை தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம், தமிழியல் மற்றும் புலம் - பேராசிரியர், இயக்குநர் முனைவர் க.பால சுப்பிரமணியன் ஆகியோர் முன்னின்று செய்துள்ளனர்.*

*மாநாட்டினை, உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, ‘உலகெங்கும் கலைஞர்’ எனும் நூலை வெளியிட்டுத் தொடக்கவுரையாற்றுகிறார்.*

*அந்நூலின் முதற்படியை, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் பெற்றுக் கொண்டு சிறப்புரையாற்றுகிறார்.*

*எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி. சிறப்புரையாற்றுகிறார்.*

*டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி., சென்னை மாநகராட்சி துணை மேயர் எம்.மகேஷ்குமார் ஆகியோர் வாழ்த்துரை வழங்குகின்றனர்.*

*முனைவர் சு.பாலசுப்பிரமணியன் நன்றி கூறுகிறார்.*

*நிறைவு விழாவில் - முனைவர் வி.ஆர்.எஸ்.சம்பத் வரவேற்புரையாற்றுகிறார்.*

*வெளிநாடுவாழ் தமிழர் நலன் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ்.மஸ்தான் தலைமை வகிக்கிறார். செய்தி மற்றும் தமிழ் வளர்ச்சித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், விருது வழங்கி நிறைவுரையாற்றுகிறார்.*

*மேலும் வி.ஐ.டி. பல்கலைக்கழக வேந்தர் டாக்டர் கோ.விஸ்வநாதன் சிறப்புரையாற்றுகிறார்.*

*முன்னாள் எம்.பி., டி.கே.எஸ்.இளங்கோவன் முன்னிலை வகிக்கிறார்.*

*தமிழ்நாடு திறந்த நிலைப் பல்கலைக் கழக துணைவேந்தர் முனைவர் சோ.ஆறுமுகம், தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழக துணை வேந்தர் முனைவர் வி.திருவள்ளுவன், தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் முனைவர் ந.அருள் ஆகியோர் வாழ்த்துரை வழங்குகின்றனர்.*

*முனைவர் சு.பாலசுப்பிரமணியன் நன்றி கூறுகிறார்.*

---

## ‘வாட்ஸ் அப்’பில் வந்தது!

## வெட்கமாக இல்லையா நிர்மலா சீதாராமன்?

“தமிழ் நாட்டில் எங்களை இந்தியும் சமஸ்கிருதமும் படிக்க விடவில்லை” - நிர்மலா சீதாராமன்.

**இந்தியும் சமஸ்கிருதமும் தமிழ் நாட்டின் மொழிகளா? தமிழ்நாட்டில் நீங்கள் எங்களை தமிழ் படிக்கவே விடவில்லை என்பதை மறக்க வேண்டாம். நீங்கள் பல நூற்றாண்டு காலமாக சமஸ்கிருதத்தை எங்கள் தலையில் சுமத்தி வைத்திருந்த ஆதிக்க வெறியர்கள். இத்தனைக்கும் நாங்கள் 97% மக்கள். நீங்கள் வெறும் 3%.**

**சென்ற நூற்றாண்டில் நீதிக்கட்சி ஆட்சிக்கு வந்த பின்பு தான் தமிழுக்கு உரிய இடம் கிடைத்தது.**

**வெட்கமாக இல்லையா நிர்மலா சீதாராமன்?**